**மன்றப்பொருள்**

நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022–இல் நாகர்கோவில் மாநகராட்சி மேயருக்கான மறைமுக தேர்தல் 04.03.2022 முற்பகல் நடைபெற்றதில் வார்டு எண். 1 முதல் 52 வரையுள்ள மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள் அதில் வார்டு எண்.4 திரு. ரெ. மகேஷ் மற்றும் வார்டு எண்.29 திருமதி. மு. மீனாதேவ் ஆகியோர் வேட்பு மனு தாக்கல் செய்து போட்டியிட்டனர் அதில் திரு. ரெ. மகேஷ் 28 வாக்குகளும் திருமதி. மு. மீனாதேவ் 24 வாக்குகளும் பெற்றனர். அதிகப்படியாக 28 வாக்குகள் பெற்ற திரு. ரெ. மகேஷ் நாகர்கோவில் மாநகராட்சியின் மேயராக தேர்வு செய்யப்பட்டார் என்ற விபரம் மன்றதின் பதிவிற்கு.

**தீர்மானம் எண். 279 – பதிவுசெய்யப்பட்டது.**

**மன்றப்பொருள்**

நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022–இல் நாகர்கோவில் மாநகராட்சி துணை மேயருக்கான மறைமுக தேர்தல் 04.03.2022 பிற்பகல் நடைபெற்றதில் வார்டு எண். 1 முதல் 52 வரையுள்ள மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள் அதில் வார்டு எண்.9 திரு. கி. சு. இராமகிருஷ்ணன் மற்றும் வார்டு எண்.33 திருமதி. ம. மேரி பிரின்ஸி லதா ஆகியோர் வேட்பு மனு தாக்கல் செய்து போட்டியிட்டனர் அதில் திருமதி. ம. மேரி பிரின்ஸி லதா 28 வாக்குகளும் திரு. கி. சு. இராமகிருஷ்ணன் 24 வாக்குகளும் பெற்றனர். அதிகப்படியாக 28 வாக்குகள் பெற்ற திருமதி. ம. மேரி பிரின்ஸி லதா நாகர்கோவில் மாநகராட்சியின் துணை மேயராக தேர்வு செய்யப்பட்டார் என்ற விபரம் மன்றதின் பதிவிற்கு.

**தீர்மானம் எண். 280 – பதிவுசெய்யப்பட்டது.**